A/L 87 Day Class
பிரிவு III
ஆரம்பம்: 10-11-1986
Zoology : 1.30-2.30 p.m
Botany : 2.30-3.30 p.m.
Physics : 3.30-4.30 p.m.
Chemistry: 4.30-5.30 p.m
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/-

G.C.E. (A/L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

ஏடு:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 1 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 14 (17-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 309

★ பெங்களூரில் சுறுசுறுப்பு ★ தீர்வைத் தேடி தீவிர முயற்சி

# இனப்பிரச்சினை: இரவிரவாகவும் பல சுற்றுப் பேச்சுக்கள்

## போராளிகள் நிலையை எம். ஜி. ஆர். தெளிவுபடுத்தினார்



ஜே. ஆர்.



ராஜீவ்

பெங்களூர், நவம்பர் 17

'சார்க்' மாநாடு நடைபெறும் பெங்களூரில், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முழு மும்முரமாகவும் சுறுசுறுப்பாகவும் நடந்தன.

இலங்கை, இந்திய–தமிழக அரசாங்க மட்டத்தில் பல கட்டங்களாக நேற்று மட்டும் ஆறு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன. இரவிரவாகவும் பல தடவைகள் பேச்சுக்கள் நடந்தன.

பெங்களூருக்கு விசேடமாக அழைக்கப்பட்டிருந்த தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் போராளிகளின் நிலையை மிக விளக்கமாகத் தெளிவுபடுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

பெங்களூரில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களின் முதற்கட்டம் சனிக்கிழமை நண்பகல் ஜே. ஆர். – ராஜீவ் (விமான நிலைய) சந்திப்புடன் ஆரம்பமானது தெரிந்ததே.



எம். ஜி. ஆர்.

அதன் பின்னர் சனி இரவு இந்திய வெளிவிவகார அமைச்சர் திவாரியும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீத்தும் சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

### நேற்று

நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகலில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் மீண்டும் நேரடியாகச்சந்தித்துப் பேசினார்கள்.

நந்திமலைச் சாரலில் அமைந்துள்ள உல்லாச பங்களாவில் இப்பேச்சுக்கள் சுமார் ஒருமணி நேரத்திற்கும் அதிகமாக நடந்தன.

காலையில் உச்சிமாநாட்டுஅங்குரார்ப்பணக் கூட்டம் முடிந்தபின்னர் தலைவர்கள் அனைவரும் நந்திமலை சென்றனர். அங்குவைத்தே பிரதமர் ராஜீவ்காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இடையே பேச்சுக்கள் நடந்தன.

இந்திய வெளிவிவகார இணைஅமைச்சர் நட்வர் சிங், உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் சிதம்பரம் ஆகியோருடன் இலங்கை அமைச்சர் ஹமீத் நேற்றும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அமைச்சர் ஹமீத் இந்தச் சந்திப்புக்காக தமது மதிய போசனத்தையும் நேரம்தள்ளி வைத்துக் கொண்டார் என அறிவிக்கப்பட்டது.



சிதம்பரம்

நேற்றைய மூன்றும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெங்களூரில் எம். ஜி. ஆர்.

சென்னை, நவ. 17

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் நேற்று பெங்களூருக்கு தனி விமானத்தில் அவசரமாகச் சென்றனர்.

இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் பேச்சுக்கள் நடைபெறும் சமயத்தில் இவர்கள் இருவரும் பெங்களூரில் தங்கி இருக்க வேண்டும் என்ற மத்திய அரசின் விருப்பத்தின் பேரில் இவர்கள் நேற்று பெங்களூர் சென்றனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

பெங்களூரில் இருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

17—11—1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.08 முதல் 1.38 வரை
ராகுகாலம்:
7.38 முதல் 9.08 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இன்று கலைஞர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், நவ. 17

கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று நடைபெறவுள்ளது

தமிழர் கலாசார அவையின் ஆதரவுடன் இந்த ஊர்வலம் நடத்தப்படும்.

இன்று காலை 9 மணி அளவில் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் இருந்து நாவலர்வீதி, கச்சேரி நல்லூர் வீதி, முத்திரைச் சந்தை, பருத்தித்துறை வீதி ஆகியவை வழியாக சென்று நல்லூர் கந்தசுவாமி கோவிலை அடையும்.

குடாநாட்டின் மறு பகுதிகளிலும் இருந்து வரும் ஊர்வலங்களுடன் இந்த ஊர்வலம் ஒன்றிணைந்து கோவில் வீதி வழியாகச் சென்று யாழ் பெரிய கோவிலைச் சென்றடையும்.

தமிழ் போராளிகள் மீதும் தலைவர்கள் மீதும் இந்திய அரசு அடிக்கடி ஏற்படுத்தி வரும் தடைகளையும், நெருக்கடிகளையும் எதிர்க்குமுகமாகவும்—

போராளிகளிடம் இருந்து கைப்பற்றப் பட்ட ஆயுதங்களை மீள ஒப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்வலம்

சாவகச்சேரி, இருபாலைப் பகுதிகளில் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

சாவகச்சேரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் நண்பகல் 1 மணியளவில் கொடிகாமத்தைச்சென்றடைந்தது.

இருபாலையில் காலை பத்து மணிக்கு ஆரம்பமான மற்றைய ஊர்வலம் 11 மணி அளவில் கோப்பாயைச் சென்றடைந்தது.

தமிழ்ப் போராளிகள் தலைவர்களுக்கு எதிராக இந்தியாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆட்சேபித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. (உ–10)

## அரச ஊழியர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி நாளை

யாழ்ப்பாணம், நவ. 17

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு வங்கிகள், சபைகள், தனியார் ஊழியர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

நிக்கராகுவாவிற்கும் எல்சல்வடோருக்கும், பலஸ்தீனத்திற்கும் இந்திய மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியது போல் ஈழ விடுதலைப் போராளிகளுக்கும் இந்திய அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும்—

தமிழ்ப் போராளிகள் மீது இந்திய அரசு தடைகள் ஏற்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும்—

தமிழ்ப்போராளிகளின் ஆயுதங்களைத் திருப்பி ஒப்படையுங்கள் எனக் கோரியுமே இவ் ஊர்வலம் நடத்தப்பட உள்ளது.

நாளை காலை 9.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

## கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்: நெடுமாறனுடன் 48பேர் பெங்களூரில் கைது!

பெங்களூர், நவ. 17

பெங்களூரில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன "சார்க்" உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்த சமயத்தில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ப. நெடுமாறன் பெங்களூர் பொலீஸாரால் நேற்றுக் காலை கைதுசெய்யப் பட்டார்.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் திரு. நெடுமாறனுடன் கலந்து கொள்ள இருந்த 48 தொண்டர்களும் பொலீஸாரினால் கைதுசெய்யப் பட்டனர். (உ–எ)

## கண்ணிவெடியில் சிக்கி கவசவாகனம் சேதம்

### பல சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், நவ 17

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை எட்டு மணி அளவில் சிப்பாய்கள் ரோந்து சென்ற வாகனத் தொடர் மீது உயிலங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இக் கண்ணிவெடியில் தென்னாபிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பவ்வின்' கவசவாகனம் ஒன்று சிக்கித் தூக்கி எறியப்பட்டு பலத்த சேதத்திற்குள்ளானது.

இதில் பயணம் செய்த அனைத்து சிப்பாய்களும் கொல்லப் பட்டிருக்கலாம் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இரண்டு 'பவ்வின்' வாகனம், இரண்டு ட்ரக் வண்டிகள், இரண்டு ஜீப் வண்டிகள்சகிதம் முருங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறிலும் கண்ணிவெடித் தாக்குதல்

பலாலி, நவ. 17

நேற்றுக் காலை தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து வெளியேறி பலாலி இராணுவ முகாமிற்கு கீரிமலை – பருத்தித்துறை வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீது போராளிகள் கண்ணிவெடி சிலிண்டர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து இரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் உயிரிழந்த தமிழர்கள் விவரம்

கொழும்பு, நவ. 17

லண்டன் ஈஸ்ட்ஹாம் பகுதியில் நெருப்புக்குண்டுத் தாக்குதலில் தீக்கிரையான வீட்டுக்குள் சிக்கி இறந்தவர்களின் பெயர்களை கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஹக்னி கல்லூரியில் கம்பியூட்டர் விஞ்ஞானம் படித்துவந்த கருணாகரன் ஆதிமூர்த்தி (23 வயது) –

லண்டன் ஸ்கூல் ஒவ் எக்னமெக்ஸில் கணக்கியல் கல்வி பயின்றுவந்த ஞானகரன் (வயது 25) ஆகிய இரண்டு சகோதரர்களும் –

லண்டன்ஸ்கூல்ஒவ்எக்ன

(4ஆம் பக்கம் பார்க்க)

## பின்கதவால் வெளியேறிய ஜனாதிபதி ஜெயவர்த்தன

பெங்களூர், நவ. 17

நேற்றுக்காலை பெங்களூரில் ஆரம்பமான 'சார்க்' உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன கடைசியாகப் பேசினார்.

பின்னர் மாநாடு நடைபெற்ற விதான் சௌதா மண்டபத்திலிருந்து பின்கதவால் வெளியேறினார் அவர்.

இரண்டு மன்னர்கள், மூன்று ஜனாதிபதிகள், இரண்டு பிரதமர்கள் கலந்து கொண்டனர்.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (சார்க்) தலைமைப் பதவியை இந்தியப் பிரதமர் காந்தி, பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத்திடம் இருந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் பிரதமர் காந்தி அங்குரார்ப்பண விழாவிற்குத் தலைமை வகித்தார்.

பிரதமர் காந்தியின் வலது பக்கத்தில் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத்தும் இடது பக்கத்தில் பூட்டான் மன்னரும் அமர்ந்திருந்தனர்.

வலது பக்கத்தில் மாலைதீவு ஜனாதிபதி கையூமும் பாகிஸ்தான் பிரதமர் ஜுனஜோவும் அமர்ந்து இருந்தனர்.

இடது பக்கத்தில் நேபாள மன்னரும் இலங்கை ஜனாதிபதியுல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் வேண்டுகோளை உதாசீனம் செய்தார் ஜே. ஆர்.!

லண்டன், நவ. 17

'சார்க்' உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த வேண்டுகோளை உதாசினம் செய்து இலங்கை அதிபர் ஜெயவர்த்தன பேசினார் என்று பி.பி.சி. வானொலி நேற்று மாலை அறிவித்தது.

பெங்களூரில் இருந்து புதுடில்லி செய்தியாளர் மார்க் ரலி இத்தகவலை அனுப்பியதாக பி.பி.சி. வானொலி நேற்று அறிவித்தது.

பெங்களூர் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் காந்தி பேசுகையில் 'சார்க்' நாடுகள் இடையே உள்ள உடன்பாடு ஒன்றைச் சுட்டிக் காட்டினார்.

அந்த உடன்பாட்டின் படி, உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகள் இருதரப்புப் பிரச்சினைகளை மாநாட்டில் கிளப்பக்கூடாது என்பதே.

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன பேசுகையி, திரு. காந்தி சுட்டிக் காட்டிய உடன்பாட்டை மீறி தமிழ்ப் போராளிகள் தென் இந்தியாவில் இருந்து இயங்குகின்றனர் என்பதைக் குறிப்பிட்டார்.

இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை தென்னிந்தியாவில் இருந்து திட்டமிட தமிழ் போராளிகளுக்கு இந்தியா அனுமதி அளிக்கக் கூடாது – இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன 'சார்க்' உச்சி மாநாட்டில் பேசுகையில் இந்தியப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இப்படி பி. பி. சி. வானொலி அறிவித்தது. (அ–எ)

## பிரசைகள் உயிரிழப்பதை நிறுத்துவதற்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளது

### 'சார்க்' மாநாட்டில் ஜே. ஆர்.

பெங்களூர், நவ. 17

எனது நாட்டில் ஆயுதப்படையினரும் தீவிரவாதிகளும் மோதுகின்றனர். நாட்டுப் பிரசைகள்உயிரிழக்கின்றார்கள். இதை நிறுத்த என்னால் ஒன்றும் செய்ய முடியாது உள்ளது.

தென் இந்தியாவில் இருந்து தமிழ்த் தீவிரவாதிகள் எனதுஅரசுக்கு எதிராக இயங்குவதை இந்தியா நிறுத்தி உதவ வேண்டும்.

—இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, நேற்று பெங்களூரில் ஆரம்பமான "சார்க்" உச்சி மாநாட்டின்போது வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியப் பிரதமரைத் திரும்பிப் பார்த்த வண்ணம் இந்த வேண்டுகோளை ஜனாதிபதி விடுத்தார்.

பிரதமரும் மேடையில் இருந்த ஏனைய நாட்டுத் தலைவர்களும் திரு. ஜெயவர்த்தனவின் பேச்சை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த பேச்சை வாசித்து முடித்த திரு. ஜெயவர்த்தன மேலும் பத்து நிமிடங்கள் மனதில் எழுந்தவாறு தொடர்ந்து பேசினார்.

அப்போது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தான் வகித்த பங்கு, சான்பிரான் ஸிஸ்கோவில் ஜப்பானை ஆதரித்து தான் பேசிய பேச்சு ஆகியவற்றை திரு. ஜே. ஆர். நினைவூட்டினார்.

பிரதமர் காந்தியை தலைவர் அவர்களே என்று விளித்து அவரைப் பார்த்த வண்ணம் அவர் பேசத் தொடங்கினார்.

"உங்கள் அம்மாவை எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் பாட்டனாரான முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுடனும் நான் பழகியுள்ளேன்.

அவரின் விருந்தினராக

(4 ஆம் பக்கம் பார்க்க)



பெங்களூரில் சுறுசுறுப்பாம், மும்முரமாம். உதுகும் மலையைக் கெல்லி எலியைப் பிடிச்ச கதையாய் இல்லாட்டால் நல்லது தான்...!

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அச்சுவேலி, நவ. 17

இடம்பெயர்ந்து பாது காப்பு கருதி தஞ்சமடைந்த] இடத்திலும் கையாடல் நடக்கிறது.

சம்பவம் பற்றிக் கூறப் படுவதாவது:-

வியாழன் இரவு அச்சுவேலியில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து பாதுகாபபுக்கருதி இடம் பெயர்ந்தவர்களுக்கு புத்தூரில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்க வசதி அளித்து நல்ல உபசரிப்பும் வழங்கப்பட்டது.

தங்கியவர்கள் திரும்பிச்சென்ற பின்பு உபசரிப்பாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். காரணம் தங்கி இருந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் சில கையாடப்பட்டிருந்தனவாம்.

படுக்கை விரிப்பு, தண்ணீர் குடிக்கும் சில்வர் கிண்ணங்கள் தான் கையாடப்பட்டபொருள்கள் என்று கூபப்படுகிறது. (இ-11)

# அச்சுவேலியில் நவீன அரிசி ஆலை

## ரூ 4லட்சம் நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, நவ.17

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 4லட்சம் ரூபா முதலீட்டில் நவீன அரிசிஆலை ஒன்றை நிறுவ உள்ளது.

இதற்கான தீர்மானம் சங்கத்தலைவர் திரு. ரி. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற நெறியாளர் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

'அச்சுவேலிச் சங்கத்தின் வாடிக்கையாளர்களுக்கு தரமான அரிசியை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு வசதியாக இந்த புதிய அரிசி ஆலையை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும்—

ஆலைக்கான இயந்திரங்களை இணைப்பதற்கு மூன்றரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் தலைவர் திரு. ரீ. கமலநாதன் தெரிவித்தார்.

அரிசி ஆலை ஆவரங்கால் 10 ஆம் கட்டையில் [உள்ள சங்கத்தின் கட்டடத்தில் அமைக்கப் படவுள்ளது (உ-11)

## பிரபாவையும் அன்ரனையும் பொலீஸ் அதிகாரியே எம். ஜி. ஆரிடம் அழைத்துச் சென்றாராம்

சென்னை, நவ. 16

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்திக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன், பேச்சாளர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை பொலீஸ் அதிகாரி ஒருவரே அழைத்துச் சென்றார்.

இப்படி 'இந்து' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

போராளித் தலைவர்களை வீட்டுக்காவலில் வைத்து இருப்பது மத்திய அரசின் பணிப்புரையின் மீதுதான் தொடருகின்றது என்று தன்னைச் சந்தித்த திரு. பிரபாகரன், திரு அன்ரன் பாலசிங்கம் ஆகியோரிடம் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார் என்றும் 'இந்து' செய்தி தெரிவிக்கின்றது.

முதலமைச்சரின் இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. (இ-எ)

## உணவு முத்திரைத் திட்டத்தை அமுல் செய்ய சமூக சேவை ஊழியர்கள் 201 பேர் நியமனமாவர்

### அபிவிருத்தி உத்தியோகத்தர்களிலிருந்து

மானிப்பாய், நவ.17

உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் 201 பேரை சமூகசேவை திணைக்கள ஊழியர்களாக அடுத்த ஆண்டில் சேர்த்துக் கொள்ள சமூகசேவைகள் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரி சமூக சேவைகள் திணைக்களம் உதவி அரசாங்க அதிபர் காரியாலங்களுக்கு அறிவித்தல் கொடுத்துள்ளது.

உணவு முத்திரை திட்டத்தை சிறந்த முறையில் அமுல் நடாத்தும் நோக்கமாக மேலதிக சமூகசேவை உத்தியோகத்தர்களை சமூகசேவை திணைக்களம் திரட்டவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் வேலை செய்யும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது உதவி அரசாங்க அதிபர் மூலமாக அனுப்பி வைக்கலாம் என்றும்—

சமூகசேவை உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் பதவி உயர்வு ஆகியவற்றில் விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-90)

## ருக்மன் தலைமையில் புதிய கட்சி அங்குரார்ப்பணம்

கொழும்பு, நவ. 17

கடந்த பதின்மூன்றும் திகதி புதிய சிங்கள அரசியல் கட்சி கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் அமரர் டட்லி சேனநாயக்காவின் 'வூட்லண்ட்ஸி'ல் இந்த அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது.

'எக்ஸத் லங்கா ஜனதா பக்ஷய' என்பது கட்சியின் பெயர். தமிழில் 'ஐக்கிய லங்கா மக்கள் கட்சி'— என்றழைக்கப்படும்.

கட்சியின் அங்குரார்ப்பணக்கமிட்டி உறுப்பினர்கள் வருமாறு;

திருவாளர்கள் ருக்மன் சேனநாயக்கா, ஏ. ஸி. குணரத்தின கியூ.ஸி. டாக்டர் காமினி விஜேசேகரா, முன்னாள் செனட்டர் எஸ்.டி.எஸ். சோமரத்தின.

புதிய செயலாளர்கள் தெரிவு செய்யப்படும் வரை திரு. ருக்மன் சேனநாயக்காவும் டாக்டர் காமினி விஜேசேகராவும் தற்காலிக இணைச் செயலாளர்களாக பணி புரிவர்.

கட்சியின் அரசியல் சட்டமும் கொள்கை விளக்கமும் இம்மாதம் 23 ஆம் திகதி முறைப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். (இ - எ)

## புதிய விமானம்

கொழும்பு, நவ. 17

கடந்த மே மாதம் கட்டுநாயக்காவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட றைஸ்டார் விமானத்துக்குப்பதிலாக புதிய விமானம் ஒன்றை கனடா விமானசேவை நிறுவனத்திடம் இருந்து எயர்லங்கா குத்தகைக்கு வாங்கியுள்ளது.

இந்த விமானத்துக்கு 'சிடி ஒப் கொழும்பு' என்று பெயரிடப்பட்டுள்ளது. (இ - எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்


சேவை

எப் பொருளானாலும் புதியனவும் / பழையனவும் வாங்கவும் / விற்கவும் தினசரி வாருங்கள் பலவித பொருட்கள் எம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன. ஏல விற்பனை நிலையம் – கோப்பாய்.


ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் 20-11-86 வரை நீடிக்கப் பட்டுள்ளமையால் அச்சிடப்பட்ட படிவம் விற்பனையாகிறது. நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

## ஊதியத்துக்காக அன்றி சேவை மனப்பான்மையுடன் ஆசிரியர் கடமையாற்ற வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 17

கஷ்டப் பிரதேசங்களில் பணி புரிய ஆசிரியர்கள் முன்வரவேண்டும். ஊதியத்திற்காக மட்டுமன்றி சேவை மனப் பான்மையுடன் பணி புரியவேண்டும்.

யாழ் ஆயர், பேரருள் திரு.கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இவ்வாறு கூறினார்.

யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க ஏழாவது ஆண்டு நிறைவு தினப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் பேசினார்.

யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு. ஏ. எஸ். அகஸ்ரின் பேசுகையில், கல்வியானது சமய அடிப்படையில் ஊட்டப்படவேண்டும்.

கத்தோலிக்க ஆசிரியர்கள் தங்கள் பணியை ஓர் அழைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பேசுகையில், மாணவர்களை ஆசிரியர்கள் அன்பால் கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

தமிழ் ஆசிரியச் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம்; அருள்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம், அருள்திரு. எஸ். ஏ. மைக்கல்சாமி ஆகியோரும் உரையாற்றினர்.

கூட்டத்தில் பண்டிதர் வித்துவான் க. த. ஞானப்பிரகாசம் யாழ் ஆயரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

திரு. ம. விக்ரர் பாராட்டுரை வழங்கினார். (இ 5)


விமானச்சீட்டுக்கள், பாஸ்போர்ட் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION, RE-CONFIRMATION

தொலைபேசிச் சேவை:
23364. 23866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2 G ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் - ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.


மக்கள் முகம்



## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 17

கட்டடத் திணைக்களப் பொறியியலாளரான திரு அ. தயானந்தன், மன்னார் மாவட்டப் பொறியியலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்

இவர் யாழ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

யாழ் தேசிய வீடமைப்பு அதிகார சபைச் செயலகக் கட்டடம், குருநகர் தொடர்மாடிக் கட்டடம் போன்ற திட்டங்களை பொறுப்பதிகாரியாக இருந்து நிறைவேற்றினார்.

தொகுதி தோறும் 10 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் யாழ் நகரில் 53 தினங்களில் 10 வீடுகளைக் கட்டி முடித்ததன் மூலம் ஒரு சாதனையை நிலைநாட்டி பாராட்டுதல்களைப் பெற்றார். (இ-எ)

## நற்சாரதி பிரிவில் நால்வர்

யாழ்ப்பாணம், நவ. 17

வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடத்திய நற்சாரதி தெரிவில் நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இத்தெரிவு, சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்தினால் நடத்தப் பட்டது.

நற்சாரதிகளின் பெயர்கள் தெரிவான ஒழுங்கின் படி வருமாறு;

1. ப. சுப்பிரமணியம் (பருத்தித்துறைசாலை)
2. பீ. இராமச்சந்திரன் (யாழ்சாலை)
3. பீ. நாகலிங்கம் (யாழ்சாலை)
4. எஸ். சிவஞானம் (யாழ்சாலை)

தெரிவை யாழ் மாவட்ட போக்குவரத்து அத்தியட்சகர் திரு. ஆர். எஸ். வைரசிங்க, ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர் திரு. [illegible] சுந்தரம் ஆகியோர் நடத்தினர். (இ-எ)

# செய்திக்கொத்து

## தென்னைக்கு மானியம்

அச்சுவேலி, நவ. 17

வடபகுதி தென்னைச் செய்கையாளர்களுக்கு அதற்கான மானியம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் யாழ் மாவட்டத்தில் உள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தென்னைமரம் ஒன்றிற்கு 50 ரூபா வீதம் வழங்கப்படவிருக்கும் இந்த மானிய உதவி வெளி மாவட்டங்களில் ஏற்கனவே வழங்கப் பட்டு வருகின்றது.

வடபகுதி தென்னைச் செய்கையாளர் குறிப்பிட்ட தொகை தென்னம்பிள்ளைகளை ஏற்ற அளவுத்திட்டத்தில் நாட்டி இருந்தால் அல்லது -

நாட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் மானியத்திற்கான விண்ணப்பத்தை செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சிபார்சுடன் மானியத்தை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ - 11)

## அடிக்கல் நாட்டு வைபவம்

வேலணை, நவ. 17

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் வேலணை கொத்தணி அதிபர் திரு. மு. சிவராசரெத்தினம், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. செ. வரதலிங்கம், பாடசாலை அபிவிருத்தி சபையின் செயலாளர் திரு எஸ். மகாலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர்.

அடிக்கல் நாட்டு வைபவத்தைத் தொடர்ந்து தற்போது கட்டட வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது. (உ - 167)

## பாவனையாளர் சமாஜம் அங்குரார்ப்பணம்

கரவெட்டி, நவ. 17

யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் சமாஜத்தினை அமைப்பதற்கான துரித நடவடிக்கைகளை யாழ் மாவட்ட உள்நாட்டு அலுவல்கள் உதவி ஆணையாளர் திரு. சி. த. மார்க்கண்டு மேற்கொண்டுள்ளார்.

பாவனையாளர் சங்க சமாஜத்தை யாழ் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திரு. வீ. எம். பஞ்சலிங்கம் இம்மாதம் 21 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். இராமநாதன், யாழ்தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கோபாலரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச பாவனையாளர் சங்கங்களின பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். இக்கூட்டம் யாழ் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (உ-70)

## மரண விசாரணை

திருகோணமலை, நவ. 17

திரியாய்க் கிராமத்தில் வசித்து வந்த இரண்டு சாரதிகளான பி. துரைசாமி (57), என். தர்மலிங்கம் (52) கடந்த 5 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டது பற்றி திருமலை நீதிவான் சுனில் ராஜபக்ஸ மரண விசாரணை நடத்தினர்.

இவர்கள் விட்டில் இருந்த சமயம் இனந் தெரியாத நபர்கள் வந்து அழைத்துச் சென்றதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கொலைச் சம்பவம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (உ - எ - 150)

## இதிலும் தமிழருக்கு கடைசி இடம் தான்

கொழும்பு, நவ. 17

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ரயில் நிலையங்களில் கடமை புரியும் 13 தமிழ் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கடைசியாகத்தான் இராணுவப்பயிற்சி வழங்கப்படும்.

இப்படி மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் எஸ். டபிள்யு. பி. வதுகொடப்பிட்டிய கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இராணுவப்பயிற்சி பெறும்படி உத்தரவிடப் பட்டதால் தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு விட்டன என்று கூறி 257 ரயில் பாதுகாப்பு அதிகாரிகள் தாக்கல் செய்த வழக்கு விசாரணை ஒன்றின் போதே மேற்கண்ட தகவல் உயர் நீதிமன்றத்தில் வெளியிடப்பட்டது.

இந்த வழக்கில் சமரசத் தீர்வு ஒன்றை ஏற் [illegible] இம்மாதம் 27 ஆம் திகதி உயர் நீதிமன்றம் முன்வர உள்ளது தெரிந்ததே. (இ -எ)


## யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் கேள்வி அறிவித்தல் 1987

### சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் முதலியன

09 - 10 - 1986 ம் திகதி என்னால் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப்பெற்று நிராகரிக்கப்பட்ட கேள்விகளுக்கும், கிடைக்கப்பெறாத கேள்விகளுக்கும், சில புதிய கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன கேள்வி பற்றிய விபரமும் நிபந்தனைகளும் கேள்விப்பத்திரங்களும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் அவ்வவ் உப அலுவலங்களில் 27 - 11 - 86-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்திலும் இணைபிரதி உப அலுவலகதிலும் 28 - 11 - 86-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வை. மு. பஞ்சலிங்கம்
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

அபிவிருத்தி சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1986-11-14.

உப அலுவலகங்கள்

| | |
|---|---|
| 01 ஊர்காவற்றுறை | 02 பானிப்பாய் பட்டினம் |
| 03 உரும்பரரய்-ஊரெழு | 04 உடுப்பிட்டி |
| 05 மல்லாகம் | 06 மானிப்பாய் கிராமம் |
| 07 ஏழாலை | 08 உடுவில் |
| 09 கோப்பாய் | 10 அனலைதீவு |
| 11 நெடுந்தீவு | 12 வேலணை |
| 13 காரைநகர் வடக்கு | 14 அராலி |
| 15 கட்டைவேலி | 16 குடத்தனை |
| 17 முள்ளிப்பற்று | 18 புலோலி |
| 19 சங்கானை | 20 பண்டத்தரிப்பு பட்டினம் |
| 21 காங்கேசன்துறை | 22 சுன்னாகம் |
| 23 நெல்லியடி | 24 கிளிநொச்சி |
| 25 கொக்குவில் | 26 நல்லூர் |
| 27 தெல்லிப்பளை | 28 மயிலிட்டி |
| 29 அச்சுவேலி | 30 நீர்வேலி |
| 31 சுழிபுரம் | 32 புலோப்பளை |
| 33 நயினாதீவு | 34 வட்டுக்கோட்டை |
| 35 மண்டைதீவு | 36 அல்லைப்பிட்டி |
| 37 புங்குடுதீவு | 38 பண்டைத்தரிப்பு கிராமம் |
| 39 புத்தூர் | 40 செம்பியன்பற்று |
| 41 கச்சாய் | 42 கைதடி |
| 43 மிருசுவில் | 44 வரணி |
| 65 சாவகச்சேரி | 46 பூநகரி |
| 47 பல்லவராயன் கட்டு | 48 கரைச்சி |



## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்ய பின்வரும் தொகுதிகளில் உள்ள ஆண், பெண் இரு பாலாரும் உடனடியாகத் தேவை

| | |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 7. சுன்னாகம் |
| 2. மானிப்பாய் | 8. இணுவில் |
| 3. சங்கானை | 9. தெல்லிப்பளை |
| 4. பண்டத்தரிப்பு | 10. காங்கேசன்துறை |
| 5. வட்டுக்கோட்டை | 11. அராலி |
| 6. காரைநகர் | |

★ ★

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;

ஸ்ருடியோ வீனஸ்
(சிறீதர் சினிமா அருகாமையில்)
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறச் சங்கம் அறிவித்தல்

எமது தொழிற் சாலையில் தயாரிக்கப் படும் கால்நடை உணவுகளை விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உணவுகளைக் களஞ்சியப் படுத்துவதற்கு போதிய இடவசதியை ஏற்படுத்தல் வேண்டும். ஒரு தொன்னுக்கு மேலாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விற்பனைக் கழிவு வழங்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட முகவர்களுக்கு போக்குவரத்து விநியோகம் இலவசம்.

விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 26-11-86-ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உடைந்த இரும்புத்துண்டு போல் அமைதியாக இருப்பவர் தூற்றுவதினால் துன்பப் படமாட்டார்.

-தம்மபதம்


# உதயன்

உண்மை - நிதானம் - ஒரு நிறைவு

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

17-11-1986 த. பெ. இல. 23


## பயங்கரவாதம் படுசிக்கல்!

இப்போது உலக மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருப்பவை இரண்டு. அதில் ஒன்று: வல்லரசுகளின் அணுஆயுதப் போட்டி. மற்றது பயங்கரவாதம்.

அணுஆயுதப் போட்டியால் ஏற்படக் கூடிய ஆபத்து அமெரிக்காவும் ரஷ்யாவும் முட்டிக்கொண்டால் மட்டுமே உண்டு. அவை மோதினால் முழு உலகத்தையுமே ஒரு சில நிமிடங்களில் அழித்து மனித சமுதாயத்தை பூண்டோடு ஒழிக்கக்கூடிய பலம் இரண்டு நாடுகளிடமும் இருப்பதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. ஆனால் இரு நாடுகளினதும் உண்மையான பாசறைக் கணக்கு வெளிப்படையாகத் தெரியாது.

பயங்கரவாதம் ஒரு சில நாடுகள் சம்பந்தப்பட்டது அல்ல. அது உலகளாவியது. பூமியின் ஐந்து கண்டங்களிலும், மூலைமுடுக்குகளில் உள்ள சின்னஞ்சிறிய நாடுகளிலும், ஒரு நாட்டிலேயே பல பிரதேசங்களிலும் பயங்கரவாதம் வியாபித்துள்ளது

பயங்கரவாதம் என்பது மக்களைப் பயங்கரமாக அழிப்பது, உடைமைகளைப் பயங்கரமாகச் சேதப்படுத்துவது என்றே பொதுவாகக் கொள்ளப்படுகிறது. கெரில்லா போர் முறையும் ஒருவித பயங்கரவாதமே என்று சிலர் அர்த்தம் கற்பிக்கிறார்கள்.

ஆனால் பயங்கரவாதத்துக்கு சரியான வரைவிலக்கணம் இன்னும் வகுக்கப்பட்டதாக இல்லை. நாட்டுக்கு நாடு, ஆட்சித் தலைவர்களின் நோக்குக்கு நோக்கு அது வித்தியாசமான விதத்தில் உருவகிக்கப்படுகிறது.

உதாரணமாக இலங்கையையும், அதன் ஆட்சித் தலைவர்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் இளைஞர்களுக்கு உண்டானது.

அதனால் அவர்கள் அந்தவழியை நாடினர். அவர்களை அரசாங்கம் பயங்கரவாதிகள் என்கிறது. ஆனால் தமிழ் மக்களோ அவர்களைத் தமது போராளிகளாகக் கருதுகிறார்கள்.

அரசாங்கப் படையினர் அப்பாவித் தமிழர்களைக் கொன்றும், உடைமைகளைச் சேதப்படுத்தியும் பெரும் வன்செயல் புரிகிறார்கள். தமிழர்கள் அதனை அரச பயங்கரவாதம் என்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அதனைத் தற்காப்பு நடவடிக்கை என்று கூறுகிறது. பயங்கரவாதம் புரியும் சிப்பாய்களை நாடு காக்கும் வீரர்கள், மறவர்கள், போராளிகள் என்று ஏற்றிப் போற்றுகிறது.

இந்தச் சின்ன நாட்டிலேயே பயங்கரவாதம் எது, உரிமைப் போராட்டம் எது என்பதனை வகுத்து வரைவிலக்கணம் கூற முடியாதவாறு அரசு குழப்பி அடிக்கிறது.

பயங்கரவாதிகள் என்றால் யார்? அவர்களை இனங்காணுவது எப்படி? பயங்கரவாதம் என்பது என்ன? அதற்குச் சரியான வரைவிலக்கணம் யாது?

இந்தக் கேள்விகளுக்கு இன்னும் உலகளாவிய ரீதியில் சரியான விடைகள் கண்டு பிடிக்கப்படவில்லை. தஞ்சாவூர் பொம்மை மாதிரி ஒவ்வொருவரும் தமக்கு வாய்த்தபடி பயங்கரவாதத்துக்கும், பயங்கரவாதிகளுக்கும் அர்த்தம் கற்பிக்கின்றனர்.

பெங்களூரில் நடைபெறும் 'சார்க்' மாநாட்டில் இந்த விடயம் பூதக்கண்ணாடியில் வைத்துப் பெருப்பித்துக் காண்பிக்கப்பட்டு விட்டது.

அதாவது மேற்காணப்படும் நான்கு கேள்விகளுக்கும் மாநாட்டின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர்கள் மட்டத்தில் விடை கூறப்படவில்லை. விடை காணப்படவில்லை என்பது தான் உண்மை. கேள்விகள் தொடர்பாக நிபுணர்கள் குழு ஒன்றைக் கூட்ட முடிவாகியதாகச் செய்தி தெரிவிக்கிறது.

நிபுணர் குழு எப்படித்தான் விடை கண்டுபிடிக்கப் போகிறதோ தெரியவில்லை.

பயங்கரவாதம் என்பது குறித்து வரைவிலக்கணம் வகுக்க முடிந்தாலும், பயங்கரவாதி என்று ஒருவரை எவ்வாறு இனங்காணுவது என்பது பெரும் சிக்கலான விடயம்.

இந்தச் சிக்கல் கழற்றப்படும் வரை பயங்கரவாதம் குறித்து எந்த மாநாட்டில், என்ன தீர்மானம் எடுக்கப்பட்டும் எதுவும் நடக்காது.

இதனை அறியாது 'சார்க்' மாநாட்டில் பயங்கரவாதம் குறித்துப் பிரேரணை கொண்டு வர அவசரமாக இலங்கை முனைந்திருக்கிறது.

தென்கிழக்காசியப் பிராந்திய மக்களை பயங்கரவாதத்தில் இருந்து இரட்சிப்பதல்ல இலங்கையின் நோக்கம். தமிழ்ப் போராளிகளுக்கு சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதிகள் என்று உத்தியோகபூர்வமாக முத்திரை குத்துவதே ஆகும்.

# லிபியப் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

## 200 சிப்பாய்கள் பலி

நீட்ஜாமீனா, நவ. 16

சாட் தேசத்தில் லிபியாவின் போர் விமானம் ஒன்று ஆயுதப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

அதில் பயணம் செய்த 200 லிபிய ராணுவத்தினரும் அதில் பலியாகியிருக்கலாம் எனவும் சாட் ராணுவ தலைமைப் பீடம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சாட் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு லிபியா உதவியளித்து வருகின்றது.

லிபியாவின் போர் விமானங்கள் யுத்ததாங்கிகள் ஆகியனவும் இந்த யுத்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன. (ஓ)

## லிபியத் துருப்புகளை விரட்ட சாட்டிற்கு பிரான்ஸ் உதவும்

பெனின், நவ.16

பிரான்ஸினதும் அதன் முன்னாள் குடியேற்ற நாடுகளினதும் தலைவர்கள் தமது வருடாந்த மாநாட்டை இன்று பெனினில் முடித்தனர்.

சாட் தேசத்தின் வட பகுதியிலிருந்து லிபியத் துருப்புகளை விரட்டியடிக்க பிரான்ஸ் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

சுமார் 20 ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் பிரான்ஸ் ஜனாதிபதி மித்தரோண்ட் பிரதமர் ஷிராக் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

சாட் ஜனாதிபதி நிஜானி ஹூசெயினின் அரசாங்கத்திற்கு எதிராக லிபியாவின் உதவியுடன் கிளர்ச்சிவாதிகள் நடத்தும் போராட்டம் தீவிரம் அடைந்துள்ளமை குறித்து ஏனைய ஆபிரிக்க நாட்டுத்தலைவர்கள் கவலை தெரிவித்தனர். (ஓ)

## சமாதான முயற்சியை அக்கினோ விடுவாரா?

மணிலா, நவ. 16

பிலிப்பீன்ஸில் இடதுசாரி அரசியல் தலைவர் ரோவன்டா ஒலாலியா கொலை செய்யப்பட்டதனாலும், கம்யூனிஸ்ட் கிளர்ச்சிவாதிகளுடன் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய இருப்பதாலும் தமது சமாதான முயற்சிகள் தோல்வியடையலாம்.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரசின் அக்கினோ தெரிவித்தார்.

இதனால் யுத்தத்தில் இறங்கவேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது

எனினும் தமது ஆறு வருட பதவிக்காலத்தில் சமாதானத் தீர்வில் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கையை சிறிதும் இழக்கவில்லை.

ஜனாதிபதி அக்கினோவை கவிழ்க்க ராணுவ சதி மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராகவும் ஜனாதிபதி அக்கினோவிற்கு ஆதரவாகவும் போராடப் போவதாக ரோலாண்டோ கொலை செய்யப்படுவதற்கு முன்தினம் அறிவித்திருந்தார். (ஓ)

## தாட்சரின் கொடும்பாவி எரிப்பு

பெல்பாஸ்ட், நவ.16

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சரின் கொடும்பாவி சனிக்கிழமையன்று நண்பகல் எரிக்கப்பட்டது.

அயர்லாந்து தலைநகரில் இச்சம்பவம் இடம் பெற்றது.

ஐரிஷ் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏற்பட்ட ஆங்கிலோ—ஐரிஷ் உடன்பாட்டை எதிர்த்து பெல்பாஸ்ட்டில் நடத்தப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போதே கொடும்பாவி எரிக்கப்பட்டது.

பெற்றோல் குண்டுகளால் கடைகள் தாக்கப்பட்டன வரா இறுதி விளையாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் இதனால் ரத்துச் செய்யப்பட்டன.

இந்த உடன்பாட்டை எதிர்த்து சனி மாலை நடந்த கூட்டத்தில் 2 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். இப்படி பி.பி.சி வானொலி அறிவித்தது. ஓ-எ)

## அயர்லாந்தில் ஆர்ப்பாட்டம்

பெல்பாஸ்ட், நவ. 16

வட அயர்லாந்தில் புரொட்டாஸ்தாந்து மதத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது 30 பொலிஸார் காயமடைந்தனர் 20 இளைஞர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

வட அயர்லாந்து நிர்வாகம் குறித்து பிரிட்டனுக்கும் ஐரிஷ் குடியரசிற்குமிடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கை கைச்சாத்தான முதலாவது ஆண்டு நிறைவு தினத்திலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு லட்சக்கணக்கான புரொட்டஸ்தாந்து மதத்தினர் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ஓ)

**வெளி உலகில்**

## கட்டாரில் சார்ள்ஸ்

டோகா, நவ. 16

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ்ஸும் இளவரசி டயானாவும் எண்ணெய் வள நாடான கட்டாருக்கு விஜயம் செய்துள்ளார்கள்.

இதற்கு முன்னர் அவர்கள் ஓமான் சென்று பி. பி. ஸியின் தூரகிழக்கு நாடுகளுக்கான அஞ்சல் நிலையத்தைப் பார்வையிட்டனர்.

கட்டாரில் சுமார் 6ஆயிரம் பிரிட்டிஷ் பிரஜைகள் பணிபுரிகின்றார்கள்.

1971 ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து கட்டார் சுதந்திரம் பெற்றது. (ஓ)

## எண்ணெய்க்கு நிலையான விலை நிர்ணயமாகும்

ஜெட்டா, நவ. 16

'ஒபெக்' ஸ்தாபன நாடுகள் மசகு எண்ணெய்க்கு நிலையான விலை ஒன்றை மீண்டும் நிர்ணயித்துக் கொள்ளத் தயாராகின்றன.

ஸ்தாபனத்தின் விலை நிர்ணயக்குழு சிபார்சு செய்துள்ள அறிக்கைகளின்படி ஒரு பீப்பா மசகு எண்ணெயின் சராசரி விலை 18 டலார்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விலைகள் தற்சமயம் வீழ்ச்சி அடைந்திருப்பதாலும் மசகு எண்ணெய்க்கான கிராக்கி குறைந்திருப்பதாலும் விலை நிர்ணயம் அவசியமானதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒபெக்' ஸ்தாபனம் கடந்த 24 வருடங்களாக நிலையான விலையேற்றத்தைப் பின்பற்றி வந்தது இவ்வருட முற்பகுதியிலேயே இந்த வழக்கம் கைவிடப்பட்டது. (ஓ)

# இந்திய அரசின் நடவடிக்கையால் இலங்கை அரச படை உற்சாகம்

## உண்ணாவிரத நிகழ்ச்சியில் உரை

அச்சுவேலி, நவ. 17

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் தலைவன் தம்பி பிரபாகரன் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட பின்புதான் தமிழ் பகுதிகளில் அரசபடைகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்திய அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏதோ ஒரு பக்கச் சார்பான முறையில் செயற்படுகின்றது என்ற எண்ணத்தை தமிழ் மக்களின் மனதில் இது ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசின் நடவடிக்கைகள் அரச படைகளுக்கே உற்சாகத்தை அளித்துள்ளது.

ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்கேஸ்வரர் (சிவன்கோயில்) ஆலய முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உண்ணாவிரதத்தை முடித்து வைத்து திரு. கே. இராசலிங்கம் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ் மக்களும் இயக்கங்களும் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

இந்திய அரசாங்கம் இந்த நேரத்தில் விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் மீது இத்தகைய தடுப்புக்காவல் நடவடிக்கைகளை மேற்கொண்டது மிகவும் கண்டிக்க வேண்டிய செயல்.

இந்திய அரசாங்கத்தின் இந்தச் செயல் முறை இலங்கை அரச படைகளை உற்சாகப் படுத்தியுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆண்களும் பெண்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தை முடித்து வைத்து நடைபெற்ற கூட்டத்தில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. ரி. கமலநாதன் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள் உறுப்பினர் திரு. க. சின்னத்துரை உட்பட பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். (இ-11)

## உணவில் சமபலம் இல்லையேல் பலவித நோய்கள் ஏற்படும்

வட்டுக்கோட்டை, நவ. 17

மாணவர்கள் ஒவ்வொருவரும் சமபல உணவை உட்கொள்ள வேண்டும் இல்லையேல் பலவிதமான நோய்களுக்கும் ஆளாகவேண்டி வரும். மலிவானவற்றில் சிறந்தனவற்றைத் தெரிந்தெடுத்துச் சாப்பிடுவதன் மூலம் சமபல உணவைப் பெற்றுக் கொள்ளலாம்.

சித்தன்கேணி கணேச வித்தியாலசத்தில் நடைபெற்ற போஷாக்கு வார விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கானைப் பிரிவு சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. ஏ. ஜோன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. ஜோன் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

இலகுவாக எடுக்கக் கூடிய உணவு வகைகளில் தாய்ப்பாலும் ஒன்று. தாய்ப்பால் பாசத்தைஉண்டாக்கும். நோய் வராது தடுக்கும் சகலவிதமான சத்துக்களும் இதில் உண்டு. இதனைத் தவிர்த்து பால்மாவை உட்கொள்வது வேதனைக்குரியது.

பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோருக்கு இரத்தச் சோகையும் பல்லுவியாதியும் ஏற்படுவதுண்டு. இவற்றிலிருந்து விடுபட இரும்புச் சத்து கல்சியம் முதலானவை அதிகமுள்ள உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

[illegible] வதி ஆசிரியை நன்றி நவின்றார். (இ-161)

## மந்திகை ஆஸ்பத்திரி சேதம்: நோயாளர் நலன்புரி சங்கம் கண்டனம்

கரவெட்டி, நவ. 17

மந்திகை அரசினர் வைத்தியசாலை வானத் தாக்குதலினால் சேதப் படுத்தப்பட்டதற்கு பிரஸ்தாப வைத்திய சாலை நோயாளர் நலன் புரிச்சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. அத்துலத்முதலி, சுகாதார அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தப்பத்து ஆகியோரை பிரஸ்தாப சங்கம் கேட்டுள்ளது.

மந்திகை வைத்தியசாலை வானத்தாக்குதலினால் இரண்டாவது தடவையாகவும் சேதப் படுத்தப்பட்டுள்ளதைச் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் நடத்தப்பட்ட வானத்தாக்குதல்களினால் காயமடைந்த பொதுமக்கள் வைத்தியசாலைக்கு அவசர அவசரமாக எடுத்து வரப்பட்டபோது அவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகளை வழங்குவதற்கு சுறுசுறுப்பாக இயங்கிய டாக்டர்கள், தாதிமார், ஊழியர்கள் ஆகிய சகலருக்கும் நோயாளர் நலன் [illegible] பாராட்டையும் தெரி [illegible] (இ-26)



**பொய்யாமொழி**

**குறள்:**

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

**பொருள்:**

ஒருவன் தன் மனத்தால் சினத்தை எண்ணாதிருப்பானானால், நினைத்த நன்மைகளை எல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.

# தீவிரவாதத்தை யுத்தம் மூலம் அடக்கிவிட முடியாது

## -சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, நவ.17

தீவிரவாதத்தை யுத்தம் ஒன்றின் மூலம் அடக்கமுடியாது. இப்போது நடப்பது தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையேயான சண்டை அல்ல. முதலாளித்துவத்துக்கும்அடக்குமுறைக்கு ஆளானோருக்கும் இடையேயான சண்டையே இது.

இப்படிச் சொன்னார் ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவி திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்க.

நாவலப்பிட்டி நகர சபை மைதானத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் சொன்னதாவது,

தமிழ் இளைஞர்கள் விரக்தி அடைந்த நிலையிலேயே உரிமைகளைப் பெற ஆயுதங்களைத் தூக்கியிருக்கின்றனர்.

உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதப் புரட்சியில் ஈடுபடுவதை நாம் ஆதரிக்கவில்லை.

1983 ஜூலைக்கலவரத்தின் பின்னரே தமிழர் ஒன்று பட்டனர்.

தமிழருக்கும் முஸ்லிமுக்கும் இடையே மோதலை உண்டாக்க அரசு முயற்சித்தது. இஸ்ரவேலரை இதற்கு அரசு பயன்படுத்தியது

தமிழரும் முஸ்லிமும் தமிழ்மொழி பேசுபவர்கள் அவர்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சிலர் விரும்பவில்லை.

ஆயுதங்கள் சப்ளைசெய்யும் ஒப்பந்தகாரர்களும் ஆயுதபடையினருக்கு உணவு விநியோகிக்கும் ஒப்பந்தகாரர்களும் இன்று நல்ல லாபம் அடைகின்றனர்.

இறக்குமதியாகும் ஆயுதங்கள் எல்லாம் சரியான இடத்துக்குச் செல்கின்றனவா என்பது நமக்குத் தெரியாது.

யுத்தம் மூலம் தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது. அரசிடம் இருப்பதைத் பார்க்கிலும் தீவிரவாதிகளிடம் நவீன ஆயுதங்கள் உள்ளன—

இப்படி திருமதி குமாரணதுங்க சொன்னார். (இ-எ)

**சமய சந்நிதிகளில்**

## விநாயகர் விரதம்

யாழ்ப்பாணம், நவ. 17

வண்-கிழக்குக் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகி இருபத்தொராம் நாள் உற்சவத்துடன் முடிவடையும்.

இந் நாட்களில் ருத்திராபிஷேகம், பிள்ளையார் கதைப்படிப்பு என்பனவும் இடம்பெறும்.

ஆலய குரு து. விவேகானந்தாக் குருக்கள் விரதாதிகளுக்குக் காப்புக்கட்டி விழாவை ஆரம்பித்து வைப்பார். (உ)

## மாணவர் போராட்டத்துக்கு லொறி போக்குவரத்து சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 17

கடத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை மீட்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

விஜிதரன் கடத்தப்பட்டதற்கான காரணம் உரியவர்களினால் தெரிவிக்கப்பட வேண்டும். அதன்மூலம் மாணவர், தூர இடங்களைச் சேர்ந்த மாணவரின் பெற்றோர்கள் ஆகியோர் மத்தியில் நிலவும் அச்சத்தைப் போக்கமுடியும்.

விஜிதரன் என்ன தவறு செய்தார் என்பதை மக்கள் மத்தியில் தெரியப்படுத்தலாம்.

இந்த நிலை நீடிக்குமானால் மாணவர், மக்கள் மத்தியில், விரக்தி, வெறுப்பு ஏற்பட இடமுண்டு.

இன்று மாணவர் படிப்பைக் கைவிட்டு விஜிதரனை மீட்க உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்று அலைவதினால் தமிழ் இனத்தின் முன்னேற்றத்தில் வீழ்ச்சி நிலை ஏற்படும் சந்தர்ப்பம் உண்டாகலாம்.

கடத்தப்பட்டுள்ள மாணவனை மீட்கும் பல்கலைக்கழக மாணவரின் நியாயமான போராட்டத்துக்கு எமது ஆதரவு உண்டு.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-எ)

## வடமாகாண ஆசிரியர் சங்கமும் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 17

தமிழ்மக்களின் நியாய பூர்வமான உரிமைக்காக போராடி வரும் அமைப்புக்களின் தலைவர்களையும் போராளிகளையும் இந்திய அரசு தடுப்புக் காவலில் வைத்துள்ளதை கண்டித்து: இலங்கை ஆசிரியர்சங்க வடபிரதேச கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கம் அறிக்கை விடுத்துள்ளது.

எமது பிரச்சினை சர்வதேசரீதியில் வலியுறுத்தப்பட்டு வரும் இவ்வேளையில், இவர்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**விக்ரு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக மீட்டல்,
வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன
**DAY CLASSES**
8-00 மணி
SAT. + SUN. 12.00 மணி

# உதயன்

17 - 11 - 1986 திங்கட்கிழமை

**விக்ரு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
I. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர் ஒன்றிணைந்து நடத்தும் ஒரே நிறுவனம்.
II. பரீட்சைப் பெறுபேறுகள் குறைந்து இருந்தால் கவலைப் படாதீர்கள். எமது நிறுவனம் கைகொடுக்கும். கடந்த காலப் பரீட்சை முடிவுகள் இதற்குச் சான்று ஆகும்.

## அடுத்த சில வாரங்களில்

# வடக்கில் கடுமையான இராணுவ நடவடிக்கை?

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நோயாளரை அனுமதிப்பதில் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 17

அடுத்த சில வாரங்களில் வடக்கில் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகி வருவதாக விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றுத் தொடக்கம் நோயாளர்களை அனுமதிப்பது கட்டுப்படுத்தப்பட்டிருப்பது இதன் முன்னோடித் தற்பாதுகாப்பு ஏற்பாடாக இருக்கலாம் எனவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் உக்கிரமடையும் பட்சத்தில் யாழ்கோட்டைக்குச் சமீபமாக இருக்கும் யாழ் ஆஸ்பத்திரியும் பெரிதும் பாதிக்கப்படும் என அச்சம் நிலவுகிறது.

இதனால் தற்போது ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

ஏனைய நோயாளர்கள் அனுமதிக்கப்படுவது நேற்றுத் தொடக்கம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

வாட்டுகளில் தங்கி உள்ளசாதாரண நோயாளர்கள் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர்; அல்லது ஏனைய வைத்தியசாலைகளில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

யாழ் போதனு ஆஸ்பத்திரி இயக்குநர் அண்மையில் அவசர டெலக்ஸ் செய்தி ஒன்றின் மூலம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## ஈழவர் முன்னணியின் ஊர்வலம் ரத்து!

யாழ்ப்பாணம், நவ. 17

ஈழவர் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஊர்வலம் கைவிடப்பட்டுள்ளது.

சென்னையில் ஈழவிடுதலைப் போராளிகள் மீது இந்திய அரசு விதித்த வீட்டுக்காவல் 15 ஆம் திகதி வாபஸ் பெறப்பட்டதை அடுத்தே இந்த ஊர்வலம் கைவிடப்பட்டதாக ஈழவர் முன்னணியின் செயலாளர் திரு. செ. எட்வேட் அறிவித்துள்ளார். (உ-10)

## நேற்றைய பேரணியில் ஐயாயிரம் மக்கள்

பலாலி, நவ. 17

தமிழகத்தில் தமிழீழப் போராளிகள் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்தும் கண்டித்தும் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் சுமார் 5 ஆயிரம் பேர் பங்குபற்றினர்.

அச்சுவேலியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி ஆவரங்காலூடாக தெற்கு நோக்கியும், ஊரெழு புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி கோப்பாய் ஊடாக வடக்கு நோக்கியும் வந்து நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலை அடைந்தது.

சுமார் அரைமைல் நீளமான பேரணியில் பெண்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் வேறுபாடின்றிக் கலந்துகொண்டனர். (உ-119)

## ஜீ. சி. ஈ. பரீட்சை டிச. 5 இல்

பலாலி, நவ. 17

ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை டிசெம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்கு இவ்வருடம் ஏறத்தாழ நான்கு லட்சத்து நாற்பதாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இலங்கையின் பகிரங்கப் பரீட்சை ஒன்றில் மிகக்கூடுதலான பரீட்சார்த்திகள் தோற்றுவது இதுவே முதல் தடவை.

இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இம்முறையே முதன்முறையாகப் பரீட்சையில் தோற்றவுள்ளனர். (இ-119)

### வடமாகாண...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக்காவலில் வைப்பதன் மூலம் தீர்வை ஏற்படுத்திவிட முடியாது.

இவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

**G. C. E. (O|L) --துரித மீட்டல்**
வெளிவந்துவிட்டது:
புதிய சமூகக் கல்வியின் சாரம் I
புதிய சமூகக்கல்வியின் சாரம் II
புதிய சமூகக்கல்வி 9 — 10 நூலாக்கக் குழு உறுப்பினரால் சுருக்கித் தரப்பட்டுள்ளது.
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 17 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60: N 86

### ஓய்வூதியம் குறித்து அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 17

முன்னர் தபால் நிலையங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்று பின்பு வர்த்தக வங்கி அல்லது கிராமிய வங்கி ஒன்றுக்கு ஓய்வூதியத்தை மாற்றும்படி விண்ணப்பித்தவர்கள் சம்பந்தப்பட்ட வங்கிக்குச் சென்று பற்றுச் சீட்டைப் பெற்று ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளும்படிகேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்தோரின் அக்டோபர் மாத ஓய்வூதியத்துக்குரிய இரண்டாம், மூன்றும் ஓய்வூதியப் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் ஆகியன அந்தந்த வங்கிக்கு அனுப்பப்பட்டு விட்டன.

அக்டோபர் மாத ஓய்வூதியத்தை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெறும்படி கோரப்பட்டுள்ளது (உ-எ)

### முஸ்லிம்கள் கண்டனம்

சாவகச்சேரி, நவ. 17

இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் சாவகச்சேரி முஸ்லிம்களும் தமிழகத்தில் தீவிரவாத தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டதையும் அவர்கள் வசம் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதையும் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (உ-31)

### இனப்பிரச்சினை...

கட்டப்பேச்சுக்கள் இரவு இந்திய மத்திய அரசின் குழுவிற்கும் தமிழக முதல்வர் எம். ஜி. ஆருக்குமிடையில் நடைபெற்றன.

இணை அமைச்சர் நட்வர்சிங் தலைமையில் அமைச்சர் சிதம்பரம், இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் மத்திய அரசின் குழுவில் பங்குபற்றினர்.

எம். ஜி. ஆருக்கு உதவியாக தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் பங்குபற்றினார்.

இரண்டு தடவைகள் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அப்போது இலங்கை அதிபர் ஜெயவர்த்தனுவுக்கும் பிரதமர் காந்திக்கும் இடையே நடந்த பேச்சுக்களின் விவரங்கள் முதலமைச்சருக்கு விளக்கப்பட்டன.

இச்சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

**ஐந்தாவது**

இந்தச் சந்திப்பை அடுத்து தூதர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்,

எம். ஜி. ஆருடன் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து டிக்ஸிற், ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு விளக்கியதாகத் தெரியவருகிறது.

இதன் பின்னர் நேற்றிரவு பத்து மணியளவில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (அ-உ-எ)

### பெங்களூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த தனி விமானம் முதலில் திருச்சி சென்று அங்கு அலுவலாகத் தங்கி இருந்த அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனை ஏற்றிக் கொண்டு சென்னை வந்தது.

சென்னையில் தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனையும் ஏற்றிக் கொண்டு பெங்களூர் விரைந்து சென்றது. (அ-எ)

### மீட்கப்பட்ட 17சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

அண்மையில் களவாடப்பட்ட 17 சைக்கிள்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்துள்ளனர்.

சைக்கிள்களின் விவரம் இலக்கங்கள் என்பன புலிகளின் குரல் பலகையில் எழுதப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டி சைக்கிள்களைப் பெற்றுச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ஷெல்குண்டு வீச்சுக்கு மத்தியில் திருட்டு முயற்சி ஆனால் கைகூடவில்லை

அச்சுவேலி, நவ. 17

அச்சுவேலியில் ஷெல் விழுந்து மக்கள் பாதுகாப்பு தேடி ஓடிய அதே வேளையில் வீடு புகுந்து திருடுவதற்கு முயன்ற ஒருவர் திருடிய பொருள்களை கொண்டுதப்ப முடியாமல் குப்பைக்குள் மறைத்து வைத்துவிட்டு மாயமாய் மறைந்து விட்டார்.

இச்சம்பவம் அச்சுவேலி தெற்கில் உள்ள திரு. குட்டியர் சின்னராசா என்பவரின் இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது.

ஷெல் குண்டு வீச்சுக்கு பயந்து திரு. கு. சின்னராசாவின் குடும்பத்தினர் பாதுகாப்பு தேடி வேறிடத்திற்கு ஓடிவிட்டனர்.

இதனை தக்க சந்தர்ப்பமாக கருதிய திருடன் வீட்டிற்குள் புகுந்து பெறுமதிமிக்க இரண்டு கூறைச்சேலை உட்பட 20க்கு மேற்பட்ட விலை உயர்ந்த சேலை மற்றும் உடுப்புகளைத் தெரிவு செய்து இரண்டு சூட்கேசுக்குள் அடுக்கிக் கொண்டு வெளியேற முயன்றிருக்கிறான்.

வீதியிலும் அக்கம் பக்கத்திலும் இளைஞர்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதை அவதானித்த திருடன் பக்கத்து வீட்டில் உள்ள குப்பைக்குள் உடுப்புகள்கொண்ட பெட்டி இரண்டையும் மறைத்துவிட்டு தப்பி விட்டான்.

விடியற்காலை வீடு திரும்பியவர்கள் களவு போனதை அறிந்து அக்கம் பக்கம் பார்த்த போது குப்பைக்குள் உடுப்பு பெட்டிகள் இருப்பதை கண்டு மீட்டெடுத்தனர். (உ-11)

## பயணிகள் பஸ்களில் படையினர் பயணம்

### திருமலையில் நடைபெறும் சேவை

திருகோணமலை, நவ. 17

திருகோணமலை நகரில் இருந்து சாம்பல்தீவு, நிலாவெளிக் கிராமங்களுக்கு சென்று திரும்பும் இ. போ. ச. பஸ்களில் பயணிகளுடன் ஆயுதப்படையினரும் ஊர்காவல் படையினரும் சேர்ந்து பயணம் செய்கின்றனர்.

திருமலை பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் திருமலை இந்து மயானத்துக்கு அருகில் வந்தவுடன் அதில் ஆயுதந்தாங்கிய ஊர்காவல் படையினர் ஏறுகின்றனர்.

மூன்றும் கட்டைச் சந்தியை பஸ் அடைந்ததும் அங்கு ஊர்காவல் படையினர் இறங்கிக்கொள்ள, ஆயுதப்படையினர் பஸ்ஸில் ஏறிக் கொள்ளுகின்றனர்.

ஆயுதப்படையினருடன் பஸ் சாம்பல்தீவு, நிலாவெளி ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பி மீண்டும் 3 ஆம் கட்டைச் சந்தியை அடைந்தவுடன் ஆயுதபடையினர் இறங்க ஊர்காவல்படையினர் ஏறிக்கொள்கிறார்கள்.

இந்து மயானத்துக்கு அருகில் பஸ் வந்தவுடன் ஊர்காவல் படையினர் இறங்கிக் கொள்கின்றனர். (உ-எ-150)

### இன்று---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கக் கோரியுமே இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது.

சகல துறைக் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது ஒருமித்த எதிர்ப்பை இந்திய அரசுக்கு காட்டுமாறு தமிழர் கலாசார அவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-10)

### லண்டனில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மெக்ஸில் கணக்கியல் நெறி பயின்றுவரும் நிர்மலன் செல்வநாயகம் (வயது 22) என்பவருமே உயிரிழந்தவர்கள்.

நெருப்புக் குண்டுத் தாக்குதலுக்குஇலக்கான வீடு ஈஸ்ட்ஹாம் பகுதியில் போர்கஸ் வீதியில் உள்ளது. (உ-எ)

### பின்கதவால்..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அமர்ந்து இருந்தனர்.

ஆங்கில 'அகர' வரிசையில் தலைவர்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

அதனால் ஜனாதிபதி ஜெயவர்த்தன கடைசியில் பேசினார்.

பங்களாதேஷ் அதிபர், பூட்டான் மன்னர், மாலைதீவு அதிபர், நேபாளம் மன்னர், பாகிஸ்தான் பிரதமர் ஆகியோர்களின் பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன பேசினார்.

அங்குரார்ப்பணக் கூட்டம் முடிந்ததும் பூட்டான், நேபாள மன்னர்கள், பங்களாதேஷ், மாலைதீவு, ஜனாதிபதிகள், பாகிஸ்தான் பிரதமர் ஆகியவர்கள் முன்வழியால் சென்று அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட கார்களில் ஏறி நந்திமலைச் சாரலில் உள்ள உல்லாச பங்களாவுக்குச் சென்றனர்.

பிரதமர் காந்தி ஒவ்வொரு தலைவரையும் வழி அனுப்பி வைத்தார்.

இவர்கள் செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன, பிரதமர் காந்தியிடம் விடைபெற்றுக் கொண்டு, பின் கதவால், நந்திமலைச் சாரல் பங்களாவுக்குச் சென்றார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இந்த ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### தொண்டமானாறு---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

னுவத் தினருக்கும் போராளிகளுக்குமிடையே நேரடிமோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேநேரம் பலாலி இராணுவ முகாமில் இருந்து இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தொண்டமானாறை நோக்கி வந்து சில நிமிடங்கள் தாக்குதலை நடத்தின.

சீபிளேனும் தாழப் பறந்து சென்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ். இன் மக்கள் விடுதலைப் படையினரும், தமிழீழ இராணுவத்தினரும் அவ்விடங்களுக்கு விரைந்து பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

## பயங்கரவாதிகளுக்கு தளம் கொடுக்காதீர்

### ராஜீவ் தலைமையுரை

பெங்களூர், நவ 17

பயங்கரவாதிகள் வேறு நாட்டுக்கு எதிராகஇயங்குவதற்குத் தளமாகப் பாவிக்க 'சார்க்' நாடுகள் தங்கள்பிரதேசத்தை அனுமதிக்கக்கூடாது.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கூறினார்.

பெங்களூர் விதான் சௌதா மண்டபத்தில் சார்க் உச்சிமாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் இந்தியப் பிரதமர் திரு. காந்தி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

திரு ராஜீவ் காந்தி மேலும்சொன்னதாவது:

தெற்காசியப் பிராந்தியத்தில் இருந்து வறுமை ஒழிக்கப்படவேண்டும்.

இதற்கான மனித பலம், மூளைபலம் திரட்டப்பட வேண்டும்.

அயலவர்கள் சிநேகமானவர்களாக வேண்டும் அப்படி இருப்பது எமது பலத்தை அதிகரிக்க உதவும் இப்படி பண்டையஅரசியல் ராஜதந்திரி கௌடில்யர் கூறியிருக்கிறார்.

இப்படி பிரதமர்காந்தி சொன்னார். (அ-எ)

### யாழ் பல்கலைக் கழக மாணவர்:

## புதன்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம். நவ. 17

விஜிதரனை விடுவிக்கக் கோரி யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் எதிர் வரும் புதன்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த உள்ளனர்.

புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழக வளவில் இவ் உண்ணாவிரதம் ஆரம்பமாகும்.

இதேவேளை யாழ்-பல்கலைக்கழக மாணவர்களது மூன்றும் கட்ட உண்ணாவிரதம் இன்று ஆரம்பமாகும்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் இன்றுடன் முடிவடைகிறது.

நேற்றைய உண்ணாவிரதத்தில் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான பெண்களும் பங்குபற்றினர். (உ-10)

### பிரசைகள் உயிரிழப்பதை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான் புதுடில்லியில்தங்கி நின்ற சமயத்தில் தான் ''இந்தியாவை விட்டு வெளியேறு'' என்ற தீர்மானம் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

காந்திஜியின் அஹிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவன் நான். அந்தவழியில்தான் நான் செயல்பட்டு வருகின்றேன்.

எனது நாட்டில் இன்று ஆயுதப்படையினரும் தீவிரவாதிகளும் மோதுகின்றனர். உயிரிழப்பவர்கள் பிரசைகள். இதை நிறுத்த என்னால் ஒன்றும் செய்யமுடியாமல் உள்ளது.

அரசியல் இலட்சியங்களை அடைய வன்முறையை கடைப்பிடிப்பதை எனது அரசு சகிக்காது. அஹிம்சை வழி முறைகளின் மூலம் தான் அரசியல் இலட்சியங்களை அடைய முயற்சிக்க வேண்டும்.

1983க்கு முன்னர் தீவிரவாதத்தை சாதாரண கிரிமினல் குற்றமாக கருதி வந்தோம். 1983 கலவரத்தின் பின்னர் தான் அது தீவிரவாதமாககருதப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியும் நானும் சேர்ந்துதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண திரு. ஜி. பார்த்தசாரதியை அழைத்தோம், அதன்பின்னர் 1984 இல் சர்வகட்சி மாநாடு வந்தது. 1984, 1985 ஆம் ஆண்டுகளில் பிரதமரான தங்களைச் சந்தித்துப் பேசினேன். பின்னர் திரு. பண்டாரி வந்து பேசினார். பின்னர் சிதம்பரம் குழு வந்தது.

**மாகாண சபை**

இப்போது நான் மாகாணசபைத் திட்டத்தை முன்வைத்தேன்.

இருதரப்புப் பிரச்சினைகளை இம்மாநாட்டில் கிளப்பக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது.

இப்படியான மாநாடுகளில் இருதரப்புப் பிரச்சினைகளைக் கிளப்பும் நிலை விரைவில் ஏற்படலாம்—

--இப்படி திரு. ஜெயவர்த்தன பேசினார்.

திரு. ஜெயவர்த்தன பேச்சை முடித்துக் கொண்டு கதிரையில் அமர்ந்த பின்னர், பிரதமர் காந்தி தலைவர் என்ற முறையில் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

### கண்ணிவெடி --

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கன் முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

கண்ணிவெடித்தாக்குதலின் பின் ஏற்பட்ட நேரடி மோதலின் இறுதியில் சிப்பாய்கள் பின்வாங்கிச் சென்றனர்.

பலத்த சேதத்திற்குள்ளான 'பவ்வின்' வாகனத்தின் சிதறிய பாசங்களை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே சிப்பாய்கள் எடுத்துச் சென்றனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இறந்த சிப்பாய்களின் உடல்கள் சிதறுண்டு காணப்பட்டதாக புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

பாண்டியன்தாழ்வு
**A J அன்ரனி**
(ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற லிகிதர், யாழ்ப்பாணம்)

அவர்கள் 16-11-86-ல் காலமானார். இவர் அன்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் செல்வின் (பிரான்ஸ்), இளட்வின் (பிரான்ஸ்), ஜெஸ்லின் (இலண்டன்), ஐறின் (புனித வளனார் அச்சகம்) கொட்வின் (பிரான்ஸ்), மேளின், மேவின் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஸ்பெல்வின் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஷாந்தஸ் இக்னேசியஸ் (இலண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், அன்றூ விநோத்தின் அன்புப் பாட்டனுருமாவார். நல்லடக்கம் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:- திருமதி அன்னம்மா
பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org